# யூலை – 06 – வெள்ளி

## புனித மரியகொறற்றி– மறைசாட்சி

## “பாவிகளையேஅழைக்கவந்தேன்” –மத் 9:13

## முதல் வாசகம் : ஆமோஸ் 8: 4 – 6, 9 – 12

ஆண்டவர் கூறுவது ”வறியோரை நசுக்கி, நாட்டில் உள்ள ஒடுக்கப்பட்டோரை அழிக்கின்றவர்களே, இதைக்கேளுங்கள். ”நாம் தானியங்களை விற்பதற்கு அமாவாசை எப்பொழுது முடியும்? கோதுமையை நல்ல விலைக்கு விற்பதற்கு ஓய்வுநாள் எப்பொழுது முடிவுறும்? மரக்காலைச் சிறியதாக்கி, எடைக்கல்லைக் கனமாக்கி, கள்ளத்தராசினால் மோசடிசெய்யலாம். வெள்ளிக்காசுக்கு ஏழைகளையும் இருகாலணிக்கு வறியோரையும் வாங்கலாம் கோதுமைப் பதர்களையும் விற்கலாம்” என்று நீங்கள் திட்டமிடுகிறீர்கள் அல்லவா? தலைவராகிய ஆண்டவர் கூறுகின்றார் ”அந்நாளில் நண்பகலில் கதிரவனை மறையச்செய்து பட்டப்பகலில் உலகை இருள்சூழச்செய்வேன்.உங்கள் திருவிழாக்களை அழுகையாகவும், பாடல்களை எல்லாம் புலம்பலாகவும் மாற்றுவேன். எல்லாரும் இடுப்பில் சாக்கு உடை உடுத்தவும், அனைவரின் தலையும் மழிக்கப்படவும் செய்வேன், ஒரே பிள்ளையைப் பறிகொடுத்தோர் புலம்புவதுபோல நிங்களும் புலம்புமாறு செய்வேன் அதன் முடிவு கசப்புமிக்க நாளாய் இருக்கும்.”தலைவராகிய ஆண்டவர் கூறுகின்றார் ”இதோ! நாள்கள் வரப்போகின்றன! அப்போது நாட்டினுள் பஞ்சத்தை அனுப்புவேன் அது உணவு கிடைக்காத பஞ்சமோ, நீரில்லாத வறட்சியோ அன்று. ஆண்டவரின் வாக்கு கிடைக்காத பஞ்சமே அது. ஒருகடல்முதல் மறுகடல்வரை, வடதிசைமுதல் கீழ்த்திசைவரை தேடிச்சென்று அங்குமிங்கும் தள்ளாடி அலைந்து ஆண்டவரின் வாக்கைத் தேடுவார்கள். ஆனால், அதைக் கண்டடையமாட்டார்கள்.

**பதில்பாடல் :** மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல கடவுளின் சொல்லாலும் உயிர் வாழ்வர்.

## நற்செய்தி : மத்தேயு 9 : 9 - 13

அக்காலத்தில் இயேசு அங்கிருந்து சென்றபோது மத்தேயு என்பவர் சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்ததைக் கண்டார் அவரிடம், ”என்னைப் பின்பற்றி வா” என்றார். அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச்சென்றார்.பின்பு அவருடைய வீட்டில் பந்தியில் அமர்ந்திருந்தபோது வரிதண்டுபவர்கள், பாவிகள் ஆகிய பலர் வந்து இயேசுவோடும் அவருடைய சீடரோடும் விருந்துண்டனர். இதைக்கண்ட பரிசேயர் அவருடைய சீடரிடம், ”உங்கள் போதகர் வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பது ஏன்?” என்றுகேட்டனர். இயேசு இதைக்கேட்டவுடன், ”நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை.”பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்” என்பதன் கருத்தை நீங்கள் போய்க் கற்றுக் கொள்ளுங்கள் ஏனெனில் நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்” என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் பாவி ஒருவரை நோக்கி இயேசு விடுக்கும் அழைப்பு நமக்கு நல்ல படிப்பனையைக் கற்றுத்தருகின்றது. பிறப்பால் யூதனான மத்தேயு உரோமைப் பேரரசின் வரிதண்டுபவராக பணியாற்றியதால் “சமூகவிரோதி” கொடுமையான “பாவி” என்றழைக்கப்பட்டார். சுங்கச்சாவடியில் வரி அறவிட்டவர் மீது அடிக்கடி படகில் பயணம் செய்யும், யேசுவின் பார்வைபட்டதால் திருச்சீடரானார். இந்த உலகிலே பாவிகளை நேசிக்கக் கூடியவர் ஒருவர் இருக்கின்றார் என்றால் அது இறைமகன் கிறிஸ்து இயேசு மாத்திரமே. “பாவிகளை அழைக்க வந்தேன்” என்ற வார்த்தைகள் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்படும் எம்மால் புரிந்து கொள்ள முடியாத வார்த்தைகள் என்று கூடக்கூறலாம். இயேசுதான் கூறியதை வாழ்ந்து காட்டினார். விபச்சாரம் செய்வோரோடு, வரி அறவிடுவோரோடு, சமுதாயத்தில் மதிப்பற்றவர்கள் என்று கருதப்பட்டவர்களோடு சமபந்தி போசனம் செய்து அன்பாக, பாசமாகப் பழகினார். கிறிஸ்தவர்கள் என்றழைக்கும் எம்மத்தியில் நடப்பதென்ன? எமக்குள்ளே எத்தனை வேறுபாடுகள், பிளவுகள் ஏற்படுத்தியுள்ளோம். உயர்ந்தவன், தாழ்ந்தவன் எனவும் பெரியவன், சிறியவன் எனவும் பாகுபாடு காட்டுகிறோம். இப்படிப்பட்ட நேர்மையாளர்களை அன்றையகிறிஸ்து மட்டுமல்ல இன்றைய கிறிஸ்துவும் வெறுக்கின்றார். நான் கிறிஸ்தவன் என்று சொல்வது சுலபம். ஆனால் கிறிஸ்தவனாக வாழுவது கடினம் அதனாலேயே கிறிஸ்துவும் “நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர்தேவை. பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதனை நீங்கள் போய்க் கற்றுக்கொள்ளுங்கள்” என்கிறார். இறைவார்த்தையின் அர்த்தத்தை உணர்ந்து செயற்படுவோம். இறைவன் கொடுத்துள்ள வாழ்விற்கு பதில் சொல்ல வேண்டிய நேரம் வெகுதூரத்திலில்லை. எமதுவாழ்வின் எஞ்சிய ஒவ்வொரு மணித்துளிகளையும் இறைமகன் இயேசுவின் புகழ்பரப்பும் பணிக்காக செலவிடுவோம். இறைமகன் இயேசுவோடான உறவிலேயே எமதுவாழ்வின் முழுமையை அடைய முடியுமென நம்புவோம். இறைமகனுடான உறவை வளர்ப்பதில் நாட்டங்கொள்வோம். நற்செய்திக்கேற்ப எமது வாழ்வை மாற்றியமைப்போம். நாமும் “நற்செய்தி ஆளர்களாக”மாற்றம் பெறுவோம்.